இலங்கை இந்தியர் இன்னல்!

சிறுபான்மையோரைச்
சிறுமைப்படுத்தும்
சிங்கக்கொடி!

செ. வயித்திலிங்கம்

(18925)
U. V. S. IYER LIBRARY MADRAS
600 028.
195/27
(18925)

ஆங்கிலத்தில்

"இலங்கைச் சரித்திரம்"

தற்கால அரசாங்கத்தைப் பற்றிய
ஒரு சிறந்த நூல்.

★

அழகிய நூறு படங்களை
அடக்கியது.

★

எழுதியவர்:
செ. வயிரத்திலிங்கம்

★

காத்திருங்கள்!

இலங்கை இந்தியர் இன்னல்

18925

★

சிறுபான்மையோரைச்
சிறுமைப்படுத்தும் சிங்கக்கொடி

★

எழுதியவர்:

— செ. வயித்திலிங்கம் —

முதற் பதிப்பு:
யூலாய் 1951.

❋

பதிப்புரிமை.

❋

— அச்சிட்டது: ஸ்ரீ பார்வதி அச்சகம், யாழ்ப்பாணம் —

முகவுரை

சரித்திரம் வருவதற்கு முன்னரே, ஈழநாட்டில் இனிது வாழ்ந்து, செங்கோலோச்சிச் சிறப்புற்ற மாபெரும் தமிழ் மக்கள், இன்று புறக்கடையில் கைகட்டி வாய்புதைத்து நிற்கும் நிலையினைக் கண்டு உள்ளங் குமுறி வெஞ்சினங் கொள்ளும் தமிழ் மக்களின் மனநிலையை வெளியிடுவது இந்நூல்.

இலங்கையின் தேசீயக் கொடி விஷயத்தில் தமிழ் சாகியத்தாருக்கு இழைக்கப்பட்ட அவமானத்தையும் அநீதியையும் அஞ்சா நெஞ்சுடன் அலசி ஆராய்ந்து எடுத்துரைப்பது இந்நூல்.

கடல் கடந்து இலங்கை புகுந்து, நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைத்து, காடுகளும், மேடுகளும், கனத்த வனாந்தரங்களும் கொண்ட இந்நாட்டைப் பொன்கொழிக்கும் நாடாகச் செய்த தென்னிந்தியச் சகோதரர்களை, இலங்கை அரசினர் மென்னியைப் பிடித்து வெளியே தள்ளும் அசுரக் கொள்கையை ஆண்மையுடன் கண்டிப்பது இந்நூல்.

அடுத்துவரும் தேர்தலில் இந்திர ஜாலங்களுக்கும் தந்திர ஜாலங்களுக்கும் இடங்கொடாது நேர்மையும் நிதானமும்

கொண்ட சத்தியவந்தர்களைத் தெரிவுசெய்யுமாறு தமிழ்ப் பெருமக்களை வேண்டுவது இந்நூல்.

சுயமரியாதை இழக்காத வீரத் தமிழ்மக்களே! பிச்சை வாங்கி உண்ணும் வாழ்க்கை தமிழ் மரபிற்கு அந்நியமானது; குற்றேவல் புரிவதும் நம் குலத்தில் இல்லை; அநீதியைக் கண்டு அஞ்சுவது நம் இரத்தத்தில் இல்லை; சத்தியமே ஜயிக்கும் என்பதில் நம்பிக்கை பூண்டவர்கள் தமிழர்கள். ஆனதினால் எழுமின்! விழிமின்!! கருதிய கருமம் கைகூடும் வரை உழைமின்!!!

தமிழினத்திற்கு வரவிருக்கும் கேடுகளை விளக்கும் இந்நூல் உங்கள் அவதானத்திற்கும் ஆதரவிற்கும் உரியது. ஆற அமர்ந்து ஆராய்வதற்குரியது. தூங்கும் தமிழினத்தைத் தட்டியெழுப்புவதற்கே இந்நூலை எழுதியுள்ளேன். இக்காரியத்தை இந்நூல் சாதிக்குமானால் எனது நோக்கம் நிறைவேறியதாகவே கொள்வேன்.

இங்ஙனம்,
செ. வயித்திலிங்கம்.

கொழும்பு,
1-7-51.

சிறுபான்மையோரைச் சிறுமைப்படுத்தும் சிங்கக்கொடி!

ஒருநாட்டின் ஜீவநாடி போன்றது அந்நாட்டின் தேசீயக்கொடியாகும். பண்டைக்காலத்து மக்களும் தேசீயக்கொடிக்கு தனிப்பெரும் மதிப்பு அளித்தனரென்பது சரித்திரவாயிலாக அறியக்கிடக்கிறது. போர்முனையிலே, ஒரு நாட்டுப் படையின் வெற்றி தோல்விகளைப் புலப்படுத்தும் உஷ்ணமானியாக அந்நாட்டுத் தேசீயக்கொடி விளங்குகிறது. தனியொரு போர்வீரன் எஞ்சிநின்றாலும் தனது கடைசி மூச்சுவரை தன் நாட்டின் கொடியைக் கீழே தாழவிடாது பிடித்தபடி போரிடுகிறான்.

இத்தகைய மதிப்புக்குரிய சின்னமாகிய தேசீயக்கொடி விஷயத்தில் இலங்கை மக்களின் நிலையென்ன?

இலங்கையின் பெரும்பான்மை மக்களான சிங்களவரின் சின்னமான சிங்கக்கொடி, சந்திர பிறை போன்ற ஏனைய சின்னங்களுடைய சிறுபான்மை மக்கள்மேல் திணிக்கப்பட்டிருக்கிறது.

எல்லா சமூகத்தவர்களாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தேசியக்கொடியைத் தயாரித்துக் கொடுக்குமாறு தேசியக்கொடிக் கமிட்டி நிறுவப்பட்டது. இதில் ஒரு இஸ்லாமியரும், இரு தமிழர்களும் நியமிக்கப்பட்டனர். நீண்டகாலமாக இக் கமிட்டி ஒரு முடிவை அடைவதற்காகப் பகீரதப் பிரயத்தனம் செய்தது. எத்தனையோ தடவைகள் கமிட்டியைக் கலைத்துவிடும் நிலைக்கும் அது வந்துவிட்டது. இறுதியில் அக்கமிட்டி அளித்த கொடியைக் கவனிக்குமிடத்து ஆதியில் இருந்த சிங்கக் கொடி பரவாயில்லையென்றே தோன்றுகிறது. கமிட்டி வகுத்த கொடியை ஸ்ரீ கே. நிசங்கா K. C., M. P. "சைத்திரீக கர்ப்பச் சிதைவு" என்று கூறினார். வவுனியாப் பிரதிநிதி திரு. சி. சுந்தரலிங்கம் "மாபெரும் மோசடி" என்று கூறினார்.

ஆனல், யார் என்ன கூறியபோதிலும் கொடிக் கமிட்டி சிபார்சுசெய்த கொடியே இன்று தேசியக் கொடியாக விளங்குகிறது.

"மஞ்சள் கோட்டிற்கு இப்புறம் வந்தால், உன்னை வெட்டி வீழ்த்திவிடுவேன்" என்று வாளேந்திய சிங்கம் சொல்வதுபோல் இருக்கிறது. அரசியல் வாழ்வில் வெளியே உதைத்துத் தள்ளப்பட்ட தமிழ் மக்களினதும் ஏனைய சிறுபான்மை மக்களினதும் நிலையினை இத் தேசியக்கொடி நன்கு சித்தரிக்கிறது.

தமிழினத்திற்கு இழைக்கப்பட்ட அநீதியைத் தாங்கமாட்டாமல், மனச்சாட்சிக்கு விரோதமான சிங்கக்கொடியை ஏற்க விருப்பமின்றி திரு. சுந்தரலிங்கம் பார்லிமென்டை விட்டு வெளியேறியுள்ளார்.

'யானை தன் தலையில் தானே மண்ணை வாரி இறைப்பது'போல் மானமிழந்து, மதிகெட்டு, தேசியக்கொடி விஷயத்தில் தமிழினத்தை நட்டாற்றில் கைவிட்ட தமிழ் பிரதிநிதிகளைத் தமிழ்மக்கள் எளிதில் மறக்கமாட்டார்கள்.

இலங்கை சுதந்தரம் அடையவேண்டுமென்பதில் பெருமளவு சிரத்தை காட்டியவர்களும் அதற்காகப் பெரிதும் உழைத்தவர்களுமான தமிழர்கள் தேசியமொழி-தேசியக்கொடி என்பவற்றில் தமது கோரிக்கைகளுக்கு நியாயமான அங்கீகாரம் கிடைக்குமென்றே எதிர்பார்த்தார்கள். ஆனல், இன்று உருவாகியிருக்கும் தேசியக்கொடியானது யு. என். பி. தமிழரிடையே எவ்வித உற்சாகத்தையும் தருவதாகவில்லை. தேசியமொழிகள் பிரச்னையைப் பொறுத்த வரையில் செய்யக்கூடிய ஒரே ஒரு வழி தமிழ் - சிங்களம் ஆகிய இரு பாஷைகளையும் உத்தியோக பாஷைகளாக்கி விடுவதேயாகும்.

இலங்கை - இந்தியரின் இன்னல்!

இந்தியா-இலங்கை ஆகிய இரு நாடுகளிடையே சௌஜன்ய உறவுகளிருப்பது பரஸ்பரம் இருநாடுகளின் க்ஷேமத்திற்குமட்டுமின்றி தென்கிழக்கு ஆசியாவில் சமாதானமும் அபிவிர்த்தியும் நிலைத்திருப்பதற்கு அத்தியாவசியமானதாகும். இலங்கை இந்தியர் பிரச்னைபற்றி உண்மையிலே – இலங்கைப் பிரஜைகளாக விரும்பும் இந்தியர்கள் தங்களது லட்சியத்தை அடைய இலங்கைச் சர்க்கார் சுலபமான வழிமுறைகளை வகுக்கவேண்டும். இந்தியா – பாகிஸ்தான் பிரஜாவுரிமைச் சட்டத்தின்கீழ் இலங்கைப் பிரஜைகளாக வரமுடியாதவர்கள் எவ்வித தடங்கலுமின்றி இங்கு தங்கியிருந்து தாராளமாக அவர்களது தொழில்களை நடத்த அனுமதிக்கப்பட வேண்டும். இந்தியர்கள் அனைவரும் தங்களது நாட்டுக்குச் சென்று திரும்ப அனைவருக்குமே தற்காலிக அல்லது நிரந்தர வாச பர்மிட் வழங்கவேண்டும் நாணயக் கட்டுப்பாட்டு விதிகள் மனித தர்மத்துக்கும், நீதி நியாயத்திற்கும் ஒத்தவைகளாக இயற்றப்படவேண்டும். இலங்கையில் பொதுத் தேர்தல் நடைபெறுமுன்னர் இலங்கை இந்தியர்களுடைய வோட்டுரிமையை இலங்கை சர்க்கார் அவசியம் கொடுக்கவேண்டும். இந்தியர்களுடைய வோட்டுரிமைகளைப் பறிக்க எத்தனித்தல் துரோகமாகும். தோட்டத் தொழிலாளர்கள் இலங்கையில் உண்மையாக ஊழியஞ்செய்த உத்தமர்கள். ஏழைகளை வதைக்கவேண்டாம். சிலருக்கு இந்தியாவுக்குப் போகும் பாதைகள்கூட இன்னமும் தெரியாது. பிரஜா உரிமை மனுக்கள்மீது இன்னும் உத்தரவுகள் பிறப்பிக்கப்படவில்லை. இந்த நிலைமையில் இந்த இலங்கைத் தமிழ்,

முஸ்லீம் சனத்தொகையை அடியோடு ஒழிக்கடிப்பது ஜன நாயகத்துக்குத் தகுதியல்ல. ஏழைத் தொழிலாளருடைய துயரம் கடைசியில் நெருப்பு மழைபோல் நாட்டிற்குத் துய ரையே விளைவிக்கும். இலங்கையின் பொருளாதார சுபீட் சத்துக்கு ஜீவநாடியாக அமைந்திருந்த இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் பிரஜா உரிமையைப் பறிப்பதுடன் வோட்டர் ஜாபிதாவிலிருந்தும் அவர்களுடைய பெயர்களை நீக்கியிருப்பது நியாயமன்று. இத்தகைய மனப்பான்மையின் விளைவுகளிலிருந்து இலங்கை அரசாங்கத்தினர் தப்பமுடி யாது. மக்களுக்கு உரித்தான ஜனநாயக உரிமையை மறுப்ப தானது, ஜனநாயகத்துக்கு மாறுபட்ட மார்க்கங்களில் பரி காரம் தேடிக்கொள்ள ஜனங்களைத் தூண்டிவிடுதல் போலா கும். ஜனநாயகத்துக்கு விரோதமான இத்தகைய மனப் பான்மையை அதிகாரவர்க்கத்தினர் களைந்து ஒழித்தாலன்றி இலங்கை சர்க்கார் தப்பமுடியாது. இந்தியாவின் உதவி இலங்கைக்கு இருந்தபடியால்தான் இன்று இலங்கையும் சுதந்திரம் கொண்டாடுகிறது. மகாத்மாவும், பண்டிட் நேரு வும் வெஞ்சிறை புகுந்து போராடினபடியால்தான் இந்தியா வுக்கும் இலங்கைக்கும் பிரிட்டன் சுதந்திரம் வழங்க நேர்ந் தது. அல்லது இருநாடுகளும் வெள்ளையரின் ஆட்சிப்பிடியி னின்று தப்பமுடியாமல் தத்தளிக்க நேர்ந்திருக்கும். இலங் கைப் பிரஜாஉரிமை பெறும் நடைமுறைகளையும், பிரஜா வுரிமை கோருபவர்களிடம் கேட்கப்படும் ருசுக்களையும் அர சாங்கம் மேலும் கடுமையாக்கி இருப்பதையும், அநேகமாக எல்லா இந்திய வோட்டர்களையும், சில இலங்கைத் தமிழர் களையும், முஸ்லீம்களையும் வோட்டர் ஜாபிதாவிலிருந்து நீக்கி விட்டிருக்கிறதையும் இலங்கைத் தமிழர்கள் ஏன் கவனிக்க வில்லை? பிரஜைகளாக விரும்புகிறவர்களுக்கு அரசாங்கம் உதவிபுரிவதற்குப் பதிலாகத் தடைகளையே விளைவிக்கின்றது.

பிரஜைகளாக மறுக்கொடுப்பவர்கள் விஷயத்தில் நேர்மையுடனும் துரிதமாகவும் இந்தக் கடைசிநேரத்திலாவது நடவடிக்கை எடுக்கவேண்டும். புதிய இந்திய ஹைகமிஷனர் வந்தபின்னாவது இந்திய சர்க்கார் உதவிபுரியுமா? இலங்கையிலுள்ள இந்திய வகுப்பினர் சமீபகாலத்தில் பலவிதமான சோதனைகளுக்கு இலக்காகி வந்திருக்கின்றனர். இன்னும் பலவிதமான பிரச்னைகள் அவர்களைக் குழப்பிக்கொண்டிருக்கின்றன. இந்தப் பிரச்னைகள் விரைவில் தீர்க்கப்பட்டவேண்டியது அவசியமாகும். இலங்கையின் அபிவிருத்திக்காகவும், அதன் க்ஷேமத்திற்காகவும் மகத்தான சேவை புரிந்து இலங்கையையே தாயகமாகக் கொண்டுள்ள லட்சக்கணக்கான இந்திய மக்களுக்குப் பிரஜாஉரிமை அளிக்க மறுப்பது உண்மையில் அதிர்ச்சியை அளிக்கிறது. பிரஜாவுரிமை கோரித் தோட்டத் தொழிலாளர் அனுப்பியுள்ள 75000 விண்ணப்பங்களில் ஒரு தொழிலாளியைக்கூடச் சர்க்கார் இதுவரை பிரஜையாகப் பதிவுசெய்யவில்லையெனத் தெரியக்கிடக்கின்றது. இலங்கைப் பிரஜைகளுக்கு மட்டுமே வோட்டளிக்கும் உரிமை வழங்கப்படுவதால் சர்க்காரின் இந்த நடத்தை சனத்தொகையின் ஒருபகுதியாளரை அரசியல் அநாதைகள் ஆக்குகிறது. வாக்காளர் ஜாபிதாக்களிலிருந்து எல்லா இந்தியப் பெயர்களையும் விரைவில் நீக்கிவிட மிகுந்த அக்கறை காட்டியுள்ள சர்க்கார், பிரஜாஉரிமைக்கான யோக்கியதாம்சங்களை நிரூபிக்கும் மகத்தான பொறுப்பை இந்திய மக்கள்மீது சுமத்தியுள்ளது. இவ்விதக் கடுமையான சோதனைகள்பற்றி அடிக்கடி பலரும் நினைவூட்டியிருக்கிறார்கள்.

இவற்றின் விளைவாக இந்திய காங்கிரஸ் தலைவர் குறிப்பிட்டுள்ளதுபோல் ஒரு அதிகாரி ஒரு நாளில் நாலு விண்ணப்பங்களை மட்டுமே பரிசீலனை செய்யமுடிகிறது. இதுவரை சுமார் ஆயிரம் விண்ணப்பங்களுக்கு அதிகமாக தீர்ப்

ப்புச் செய்யப்படவில்லை. இன்னும் இரண்டு மாதங்களில் வாக்காளர் ஜாபிதாக்கள் தயாராகவேண்டியிருக்கிறது. இந்தியா - இலங்கையிலுள்ள நண்பர்களின் ஆலோசனைப்படி பிரஜா உரிமைச்சட்டம் பகிஷ்காரம் செய்யப்பட்டும் போதிய பலன் கிடைக்கவில்லை. நண்பர்களின் வற்புறுத்தலுக்கு இணங்க ஒத்துழைத்தும் எவ்வித பலனும் கிட்டவில்லை. பிரஜா உரிமைச் சட்டப் பகிஷ்காரம் தற்கொலைக்கொப்பானதென்றால், அந்தச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்ய முயற்சிப்பது தன்னைத் தூக்கிடுவதற்கு வேறொருவரிடம் கயிறு யாசிப்பதைப் போன்றதாகும் எனத் தங்களது அனுபவத்திலிருந்து பலர் கண்டுகொண்டுளர்.

1950-ம் ஆண்டுக்கு முன்னர் இலங்கையில் குடியேறி 5 வருடகாலம் வாசம்செய்த இந்தியர்கள் எல்லோரும் அவர்களைச் சார்ந்திருப்போரும் இலங்கைப் பிரஜைகளாக விரும்பினால் பூரண பிரஜாஉரிமை அளிப்பதற்குச் சாதகமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று வற்புறுத்தும் தீர்மானம் சமீபத்தில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் கொண்டுவரப்பட்டது. அது தவறினால் இலங்கையில் உள்ள இந்தியத் தோட்டத் தொழிலாளரை இந்தியாவிற்கு மீண்டும் அனுப்புவதற்குரிய ஒழுங்குகளைச் செய்யுமாறு இத்தீர்மானம் வற்புறுத்துகிறது. இலங்கையில் உள்ள இந்தியர்களைப்பற்றிக் கொண்டுவரப்பட்ட இந்த உத்தியோகப் பற்றற்ற இத் தீர்மானம் ஸ்ரீ நேரு விவாதத்தில் பங்குபற்றியதன் பலனாக வாபஸ் பெறப்பட்டது. தீர்மானம் வாபஸ் பெறப்பட்ட போதினும் 10 லட்சம் இந்தியர்களைக் கொண்ட இலங்கையில் ஒருசில நூற்றுக்கணக்கானவர்களுக்கே இலங்கையில் பிரஜா உரிமை அளிக்கப்பட்டிருப்பதாக இந்த நியாயமான தீர்மானத்தைக் கொண்டுவந்தவர்கள் வற்புறுத்தியதைப் பண்டிட் நேரு ஒப்புக்கொள்ளவில்லை

யென்று அர்த்தங்கொள்ள முடியாது. இலங்கையில் இந்தியர் ஒரு சர்வதேச தீண்டாச்சாதியாகப் பாவிக்கப்படுவதை மற்றவர்களைப்போல் ஸ்ரீ நேருவும் நன்கு அறிவார். ஆனால், இலங்கை ஒரு சுதந்திரநாடு; இந்தியாவுடன் சரித்திர கலாச்சாரத் தொடர்பும், அண்டை நாட்டுறவும் கொண்டது. இலங்கை ஒரு சிறிய தேசம். ஆனால், பெரிய நாடான இந்தியாவுக்கு அருகாண்மையிலிருப்பதில் கொஞ்சம் அதிகமாக அது மனப்பயம் கொண்டுள்ளது. இதை அகற்றுவது இந்தியாவின் கடமை. இலங்கையின் நம்பிக்கையைப் பெற்று, நம்மைக் கண்டு இலங்கை மக்கள் அஞ்சவேண்டியதில்லை யென்ற நம்பிக்கை யூட்டுவது இந்தியாவின் கடமையாகும். அதுதான் புத்திசாலித்தனமான செய்கையுமாகும். அதை விடுத்து பலாத்காரமும் பயமுறுத்தலும், இரு நாடுகளின் பரஸ்பர உறவைத் துண்டித்துச் சங்கடங்களில் அவற்றை மாட்டிவிடும். இரு நாடுகளுக்குமிடையே நேசப்பான்மை நிலவுவதுதான் இரண்டிற்கும் நன்மை பயக்கும் என்பதாக பண்டிட் நேரு விவாதித்தார்.

இலங்கையின் செழுமைக்காக உழைத்த பல்லாயிரக் கணக்கான இந்தியத் தொழிலாளருக்கு ஸ்ரீ நேரு புகழுரை கூறியபோதிலும் அவர்களை இந்தியாவிற்குத் திருப்பி அனுப்புவது அசாத்தியம் என்பதை அவர் கூறத் தயங்கவில்லை. இலங்கையிலுள்ள இந்தியச் சமூகத்தினருக்கு நியாயம் வழங்குமாறு இலங்கை சர்க்காரைச் சமாதானமுறையில் நேச பாவத்துடன் நிர்ப்பந்திக்கப்போவதாகப் பிரதம மந்திரி உறுதியளித்துள்ளார். இதுவிஷயமாக இந்தியர்களிடையே நிலவும் கடுமையான மனத்தாங்கலை அடிப்படையாகக் கொண்ட தீர்மானத்தை வாபஸ்பெறும்படி செய்த ஸ்ரீநேருவின் பெருந்தன்மையை இலங்கையின் பிரஜாவுரிமைக் கொள்கையை வகுத்தவர்கள் அறியத் தவறமாட்டார்கள்

என்றே நம்புகிறோம். ஸ்ரீ நேருவின் பெருந்தன்மையான செயலுக்குப் பிரதிபலனாக இலங்கை செய்யவேண்டிய சில வற்றை அனுபவ அறிவின் உதவியால் ஸ்ரீ கிரி எடுத்துக் கூறியுள்ளார். இலங்கையர் மயமாக்கும் கொள்கையை இந்தியர் ஆட்சேபிக்கவில்லையென்றும், இலங்கைக்கு அநாவசியமான இந்தியர்களை அதன்மேல் திணிக்க அது விரும்பவில்லையென்றும், இலங்கை அதிகாரிகளுக்கு ஸ்ரீ கிரி எடுத்துக் கூறியுள்ளார். 1939-ம் ஆண்டிலேயே தொழில் நுட்பத் திறமையற்ற தொழிலாளர்களை இலங்கைக்குச் செல்லவொட்டாது இந்தியா தடைவிதித்தது. இலங்கை நிர்வாகத்தையும் வர்த்தகத்தையும் இலங்கையர் மயமாக்குவதை இந்திய வர்க்க சமூகத்தினர் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டனர். குடியேறுவதைக் கட்டுப்படுத்துவதின் அவசியத்தையும் அவர்கள் ஏற்றுக்கொண்டனர். ஆனதினால் மனப்பூர்வமாக இலங்கைப் பிரசைகளாக விரும்பும் இந்தியர்களுக்கு இலங்கை சர்க்கார் பூரண பிரஜா உரிமையை வழங்குவதற்குத் தயங்கக்கூடாது. இத்தகையஉரிமையை ஒருசமூகத்தினர் மறுக்கப்பட்டு அதன்மூலம் வாக்குரிமை பறிமுதல் செய்யப் படுதல் இலங்கையின் ஜனநாயக சுதந்திரத்தைப் பழிப்புக்குள்ளாக்கும். அரசியல் அமைப்பு அல்லது சட்டம் இடங் கொடாமையால் இலங்கை இந்தியர்களுக்குப் பிரஜாஉரிமை அளிப்பது சாத்தியமில்லையானால் தத்தம் தொழில்களைப் பார்த்துக்கொண்டு இலங்கையில் தங்கியிருப்பதற்கேனும் அவர்களுக்குத் தொந்தரவு இருக்கக்கூடாதென்று ஸ்ரீ கிரி கூறியுள்ளார். இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையே அவர்கள் சுலபமாகப் போய்வரக்கூடிய முறையில் தற்கால வாசப் பர்மிட் அளிக்கலாம். செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டங்கள் நடைமுறையில் இலங்கை இந்தியர்களுக்குப் பெரும் மனத்துயரை விளைவித்துவந்தன. நமது மாஜி ஹைகமிஷ

னர் கூறியதுபோல் இச்சட்டங்களை மனிதத்தன்மை பொருந்தியனவாகச் செய்தல் வேண்டும். பண்டிட் நேரு அளித்த நட்புக்கரத்தை இலங்கை சர்க்கார் பற்ற விரும்பினால் சட்ட ரீதியான காரணங்களைக் காட்டுவதை விடுத்து பெரும் கஷ்டம் விளைவித்துள்ள இப் பிரச்னைக்கு ஏதாவது காரிய சாத்தியமான பரிகாரம் அளிக்கவேண்டும் என்பதை இந்தியாவும் இலங்கையும் ஏற்றுக்கொள்வதோடு தங்களுக்கிடையிலுள்ள பிரச்னைகள் எதுவும் இறுதியாகத் தீர்மானிக்கப்பட்டவையல்ல என்பதையும் இருநாடுகளும் ஒப்புக்கொள்ள வேண்டும். ஸ்ரீ கிரி மேலும் கூறியதாவது:—

இந்தியா இலங்கைப் பிரச்னையைத் தீர்ப்பதில் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி எதுவும் காணப்படாததை உத்தேசித்து, அ. இ. கா. கமிட்டியில் தீர்மானம் கொண்டுவந்தவர்களின் உணர்ச்சியை நான் நன்கு உணர்ந்துகொள்ள முடியும். இந்தியாவின் கட்சியை இந்தியப் பிரதமர் கமிட்டிக் கூட்டத்தில் சிறந்த ராஜதந்திர ரீதியில் விளக்கிக் கூறியதில் நான் மிக்க சந்தோஷமடைகின்றேன். இலங்கையிலுள்ள இந்தியத் தோட்டத் தொழிலாளரிடம் இலங்கை துர்நோக்கம் கொண்டிருப்பதாக மாஜி இலங்கை இந்தியக் காங்கிரசின் தலைவரும் பார்லிமெண்டு மெம்பருமாகிய ஸ்ரீ எ. அஸீஸ் குற்றம் சாட்டுகிறார். ஸ்ரீ அஸீஸ் விடுத்துள்ள அறிக்கையில் கூறுவதாவது:

தோட்டத் தொழிலாளர்கள் இலங்கைப் பிரஜைகள் அல்லவென்று காரணம் கூறி வோட்டர் ஜாபிதாவிலிருந்து 1,75,000 தோட்டத்தொழிலாளரின் பெயர்கள் நீக்கப்பட்டு இருக்கின்றன. பிரஜாஉரிமை மனுக்கள்மீது இன்னும் தீர்ப்புப் பிறப்பிக்கப்படவில்லை. மனுக்கள் போட இன்னும் அவகாசம் இருக்கிறது. இந்த நிலைமையில் இந்தத் தேசத்தின் ஜனத்தொகையில் 100 க்கு 14 பேரின் வோட்டுரிமையை

ஒரேயடியாகப் பறித்திருப்பது ஜனநாயகத்துக்கு விரோத மான நடவடிக்கையாகும். இந்தத் தேசத்தின் பொருளா தார சுபீட்சத்துக்கு ஜீவநாடியாக அமைந்திருந்த இந்தியத் தோட்டத் தொழிலாளரின் பிரஜா உரிமையைப் பறித்திருப்ப துடன் வோட்டர் ஜாபிதாவிலிருந்தும் அவர்களை நீக்கி யிருப்பது அடாத செய்கையாகும். பாராளுமன்றத்தில் அவர்களின் பிரதிநிதிகள் வகிக்கும் ஸ்தானங்களைப் பறிக்க இப்போது பதவியிலுள்ள அரசியல்கட்சி உத்தேசித்திருப்ப தால் அவர்களுக்கு பிரதிநிதித்துவ மில்லாது போய்விடும். இந்திய பிரஜா உரிமைச் சட்டத்தின்கீழ் ஆயிரக்கணக்கான வோட்டர்களின் மனுக்கள் ரிஜிஸ்டிரெஜன் அதிகாரியின் பரி சிலனையில் இருப்பினும் வாரத்தில் மூன்று அல்லது நான்கு மனுக்கள்மீதுதான் தீர்ப்புப் பிறப்பிக்கப்படுகிறது. இதன் அரசியல் நோக்கம் என்னவென்பது வெளிப்படை. இத் தகைய மனப்பான்மையின் விளைவுகளிலிருந்து இலங்கை அர சாங்கத்தினர் தப்பமுடியாது. மக்களிடமிருந்து அவர் களுக்கு உரித்தான ஜனநாயக உரிமை பறிக்கப்பட்டால் அவர்கள் வேறு மார்க்கங்களில் பரிகாரம் தேடிக்கொள்ளத் தான் முயற்சிப்பார்கள். மக்களில் ஒரு கணிசமான பகுதி யினரை அரசியல் ரீதியாக நசுக்கி வைத்திராவிடில் நம் மிடையே பரஸ்பர உறவு எப்பொழுதும் இருந்துவரும் என் பதில் எனக்குச் சந்தேகமே கிடையாது. மதத்துறை மட் டிலுமன்றிச் சகல சர்வதேசக் காரியாதிகளிலும் எப்பொழு தும் இருநாடுகளும் சிநேகமாகவே இருக்கும். 1949-ம் வரு டம் நவம்பர் மாதத்துக்குமுன் அதாவது குடியேற்றச் சட் டம் அமுலுக்கு வருமுன்னர் இலங்கையில் வசித்த அனை வருக்கும் கடிதம், கடைக்கணக்குப் புத்தகம் முதலியவற்றை அத்தாட்சியாக ஒப்புக்கொண்டு தற்காலிக வாச பெர்மிட் வழங்கப்படவேண்டுமென்றும், பெர்மிட் மறுக்கப்பட்டவர்

களின் விஷயத்தைப் பரிசிலனைசெய்ய ஒரு விசாரணைக் குழு நியமிக்கப்படவேண்டுமென்றும் வத்துகாமம் காங்கிரஸ் கேட்டுள்ளது. தற்காலிகவாசப் பர்மிட் பெறுவதும், அதைப் புதுப்பிப்பதும் இப்போது அதிகக் கஷ்டமாகி வருவதாக நமக்குக் கிடைக்கும் புகார்களிலிருந்து தெரிகின்றது.

ஏற்கனவே எல்லா அத்தாட்சிகளையும் காட்டி பர்மிட் பெற்ற ஒருவர் பர்மிட்டைப் புதுப்பிக்கச் செய்துகொண்ட மனுவுடன் முன்னர் காட்டிய அத்தாட்சிகளையெல்லாம் அனுப்பியிருந்தும் அந்த அத்தாட்சிகள் போதாதென்றும், கூடுதலாக வேறு அத்தாட்சிகள் வேண்டுமென்றும் கூறி, மனுவைக் குடியேற்றக் காரியாலயம் திருப்பி அனுப்பி விட்டதாகவும், புதிதாக என்ன அத்தாட்சியளிப்பதென்பது தமக்கு விளங்கவில்லையென்றும் ஒருவர் எழுதுகின்றார். ஏற்கனவே சமர்ப்பித்த அத்தாட்சிகள் ஐந்துவருடகாலம் வசித்ததை நிரூபிக்கப் போதுமென ஒப்புக்கொள்ளப்பட்டே பர்மிட் அளித்துள்ளனர். 1949-ம் வருடம் நவம்பருக்கு முன் ஐந்துவருடகாலம் இங்கு வசித்திருப்பவருக்கு வாச பர்மிட் மறுக்கப்படக்கூடாதென்று குடியேற்றச்சட்டம் கூறுகின்றது. அப்படியிருக்க ஏற்கனவே பர்மிட் பெற்றவர்களைப் புதிய அத்தாட்சிகள் கொண்டுவரவேண்டுமென்று கேட்பது எவ்விதம் நியாயமாகும்?

இது நேர்மையற்றதுவும், மக்களை வீண் இம்சை செய்வதுமாகும். மேலும் சமாதான நீதிபதியிடம் உறுதிகூறி, அவர் கையெழுத்துடன் பெறப்படும் அத்தாட்சிப் பத்திரங்கள் பல சட்டரீதியான தேவைகளுக்கு ஒப்புக்கொள்ளப் படுகையில் இவ்விஷயத்தில் மட்டும் அவ்வித பத்திரங்களை ஒப்புக்கொள்ள மறுப்பானேன். ஒருரூபாய் கொடுத்தால் இவ்விதப் பத்திரங்கள் பெற்றுவிடலாம் என்றும், ஆகவே இதை ஒப்புக்கொள்ளுவதற்கில்லை என்றும் சொல்லப்படு

கிறது. அப்படியானல் மற்றச் சட்டசம்பந்தமான தேவைகளுக்குமட்டும் இப் பத்திரங்களை ஒப்புக்கொள்ளலாமா?

வாசப் பர்மிட்டுகள் வழங்குவதற்கும் சமானான நீதிபதிகளின் அத்தாட்சிப் பத்திரங்களை ஏற்பது எல்லோருக்கும் பெரும் கஷ்டநிவாரணமாக இருக்கும். இப்போது எவ்வித அத்தாட்சிகளையும் சரிவரப் பார்க்காமலே நிராகரிக்கக்கூடிய சர்வாதிகாரம் குடியேற்ற அதிகாரிகளிடம் இருப்பதாகத் தெரிகிறது. அரிசிக்கூப்பன் வழங்க அடிப்படையான வீட்டு ஜாபிதாக்கள் மூலம் 1947-ம் வருடத்துக்கு மேல் இலங்கையில் வசித்ததை நிரூபித்துக்காட்டவேண்டும் என்று ஓர் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதிலும் ஏதோ கள்ளத்தனம் நடப்பதாகக் கருதியதால் அதையும் இப்பொழுது ஒப்புக்கொள்ளுவதில்லை. திட்டவட்டமான அத்தாட்சிகள் எவையெனக் குறிக்கப்படாமையால் அதிகாரிகட்குத் திருப்திகரமான அத்தாட்சியைக் காட்டுவதென்பது குதிரைக் கொம்பாகும். மேலும் இவ்வித நிலைமை, லஞ்சம், பாரபட்சம் முதலிய புகார்களுக்கு இடமளிக்கிறது. இதனால் ஏழை எளியவர்கள் பர்மிட் பெறுவது அதிக சங்கடமாகின்றது. தன் நிர்வாகத்தின் நற்பெயரையும், இந்தியா இலங்கை நல்லுறவையும் அரசாங்கம் முக்கியமாகக் கருதுமாயின் வாசபர்மிட் வழங்குவதில் கையாளும் கடும்முறைகளைத் தளர்த்த வேண்டியது அவசியம். ஒருவிதத்தில் அவற்றைத் திருத்தியமைக்கலாமென்பதற்கு மேற்குறித்த தீர்மானங்கள் தக்க யோசனைகளைக் கூறுகின்றன. ஆனால்......

அரசாங்கத்தின் இப்போதைய மனப்பான்மை மாறினாலல்லாது மேற்குறித்த யோசனைகளில் எதுவும் ஏற்கப்படுவது சந்தேகமே. எவ்வளவு சீக்கிரத்தில் இந்த மனமாற்றம் ஏற்படுகிறதோ அவ்வளவில் சம்பந்தப்பட்ட அனைவரும் நலம் பெறலாம். உங்களை இலங்கைப் பிரஜைகளாக அரசாங்

கம் அங்கீகரிக்காவிடில் உங்களுக்கு வோட் இருக்காதென்றும், உங்களுடைய வேலைக்கே ஆபத்து ஏற்படும் என்றும், உங்களுடைய குழந்தைக்கு அரசாங்கத்தில் ஒரு 'பியூன்' வேலைகூடக் கிடைக்காதென்றும், பிராவிடென்ட்நிதி, பென்ஷன் திட்டம் முதலியவைகளில் உங்களுக்குப் பங்கு இருக்காதென்றும் சொல்லும்பொழுது உங்கள்பேரில் அரசியல் நிர்ப்பந்தம் பிரயோகிக்கப்படுகின்றது. நமது உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ள நாம் சதா விழித்துக்கொண்டு சர்வ ஜாக்கிரதையுடன் இருக்கவேண்டியதாகிறது. சென்ற ஆண்டில் அநேக வேலைநிறுத்தங்கள், தொழில் தகராறுகள் முதலியவற்றை நாம் சமாளிக்கவேண்டி இருந்தபடியினால் நிர்மாண வேலைகளுக்கு அவகாசமேயில்லாமற் போய்விட்டது. தோட்டத்தொழிலாளர்கள் செய்து சட்ட உதவியை நாம் நாடுமாறு முதலாளிமார்கள் செய்யாமலிருந்தால் முதலாளி – தொழிலாளி உறவு எவ்வளவோ ரம்மியமாக இருக்கும். தோட்டத் தொழிலாளிகளிடம், சில புதிய முதலாளிகள் காட்டுமிராண்டித்தனமான கொள்கைகளை அனுஷ்டித்தால் முதலாளி-தொழிலாளி உறவு அத் தோட்டங்களில் மருந்துக்குக்கூடக் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. சில தோட்டங்களில் தொழிலாளர்மீது பலாத்காரமும், காடைத்தனமும் பிரயோகிக்கப்படுகின்றது. தோட்டங்களுக்குள் தொழிலாளருடைய இனசன பந்துக்கள்கூட அனுமதிக்கப்படுவதில்லை. ஒருசமயம் நோய்வாய்ப்பட்டிருந்த ஒரு குழந்தையை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்வதற்காக காரை தோட்டத்திற்குள்விட அனுமதிக்காதபடியினால் அந்தக் குழந்தை போதிய வைத்திய வசதியில்லாமல் இறந்துவிட்டது. இந்தியாவின் பிரதம மந்திரிக்கு இலங்கைப் பிரதம மந்திரி கொடுத்த வாக்குறுதிகளுக்கு விரோதமான குடியேற்ற வெளியேற்றச் சட்டம் மனச்சாட்சிக்கு

விரோதமாகவும் அமுல் நடத்தப்படுவதைக்கண்டு இ. இ. கா. கவலை அடைந்துள்ளது. இலங்கையில் ஒருவர் வசிப்பதற்கு அத்தாட்சியாகக் கணக்குப் புத்தகங்களோ அல்லது முதலாளிமார்களின் அத்தாட்சிக் கடிதங்களோ, கௌரவமான மனிதர்களின் கடிதங்களோ இமிகிரேஷன் அதிகாரிகளினால் ஒப்புக்கொள்ளப்படுவதில்லை. ஐந்து வருடங்களுக்குக் குறைவாக இலங்கையில் வசித்தவர்களுக்கோ வாசப்பர்மிட் வழங்கப்படுவதேயில்லை. எனவே, இலங்கை அரசாங்கத்திற்கு இ. இ. கா. பதினோராவது மகாநாடு கீழ்க்கண்ட வேண்டுகோள்களைச் சமர்ப்பிக்கின்றது:—

கணக்குப் புத்தகங்கள், முதலாளிகளின் அத்தாட்சிப் பத்திரங்கள், கௌரவம் வாய்ந்த பிரமுகர்களின் கடிதங்கள் ஆகியவற்றை வாசப்பர்மிட் வழங்குவதற்குப் போதிய ருசுக்களாக இமிகிரேஷன் அதிகாரிகள் ஒப்புக்கொள்ளவேண்டும். இமிகிரேஷன் – எமிகிரேஷன் சட்டம் அமுலுக்கு வந்த 1949-ம் வருட நவம்பர் மாதத்தில் இலங்கையில் வசித்த எல்லா இந்தியர்களுக்கும் வாசப்பர்மிட் வழங்கப்படவேண்டும். வாசப்பர்மிட்டுகள் மறுக்கப்பட்டவர்களுடைய மனுக்களைப் புனராலோசனை செய்ய இ. இ. கா. வுக்குப் போதிய பிரதிநிதித்துவம் அளித்து ஒரு பரிசீலனைச் சபையை நியமிக்க வேண்டும். மேற்படி தீர்மானத்தை ஆதரித்துப் பலர் பேசினார்கள். அப்பொழுது வாசப்பர்மிட்டுகளைப் பெறுவதிலுள்ள பலவகைப்பட்ட கஷ்ட நஷ்டங்களும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டன. இலங்கைப் பிரஜா உரிமையைப் பெற்றவர்களாயினும்சரி, பெறாதவர்களாயினும் சரி 18 வயதிற்கு மேற்பட்ட சகல இந்தியர்களும் இலங்கை இந்தியக் காங்கிரஸில் அங்கத்தினர்களாகச் சேருவதை அனுமதிக்கக் காங்கிரஸ் அமைப்புவிதியைத் திருத்தும் தீர்மானம் விவாதிக்கப்பட்டபொழுது இலங்கை இந்தியர்களுக்கு இது மகத்தான

சோதனைகாலமென்றும், அவர்களுக்கிடையில் ஒற்றுமையும் கட்டுப்பாடும் இப்பொழுதுதான் மிகமிக அவசியமென்றும், கடைசி இந்தியன் பிரஜாஉரிமை பெறும்வரை பிறவியிலேயே இந்தியர்களாயும் – பாகிஸ்தானியர்களாயும் உள்ள சகலரும் காங்கிரஸில் அங்கத்தினர்களாக இருப்பதை அனுமதிக்க வேண்டுமென்றும், பிரஜா உரிமை வழங்குவதற்கு விதித்துள்ள யோக்கியதாம்சங்களும், கையாளப்படும் நடைமுறைகளும் மிக்க கடுமையாயும் சிக்கலாயும் இருப்பதாயும் அவை எவரெவர்களுக்கு நியாயமாகப் பிரஜா உரிமை அளிக்கலாமென்பதை நிர்ணயிப்பதற்காகவல்லாமல் இலங்கை இந்தியர்களின் பெரும்பகுதியினரான தொழிலாளர்களின் கல்வியறியாமையையும், இதர வசதியீனங்களையும் பயன்படுத்திச் சாத்தியமான அளவுக்குப் பிரஜா உரிமையைப் பறிக்கும் நோக்கத்தோடு இயற்றப்பட்டனவாகத் தோன்றுகின்றனவென்றும் சுட்டிக் காட்டப்பட்டது.

இந்திய முஸ்லீம்களுக்கும் இலங்கை முஸ்லீம்களுக்கும் இடையிலுள்ள வேற்றுமைகளும் இதேவிதமாகத்தான் கையாளப்படுகின்றன. இவர்களுடைய பேச்சிலேயே வித்தியாசம் இருப்பதைச் சுலபமாகக் கண்டுகொள்ளாமல் இருக்கவே முடியாது. இலங்கையர் மயமாக்குவதாகச் சொல்லிக் கொண்டு வகுப்புவாதத்தை நிலைநாட்டுவது அபாயகரமான விளைவுகளை உண்டுபண்ணுமென்பதற்கு இது ஒரு உதாரணம். உத்தியோக விஷயத்தில் அரசாங்க மந்திரி இலாகாவின் வரையறையற்ற நடவடிக்கைகள் ஏற்கனவே வேலைகளில் இருந்துவரும் இலங்கையரல்லாதவர் எனப்படுவோருக்கு மிகுந்த கஷ்ட நஷ்டங்களை விளைவிக்கக்கூடும். தோட்டச் சிப்பந்திமார்கள் யூனியனுடன் செய்துகொள்ளப்பட்டுள்ள ஒரு உடன்படிக்கையின்படி 1-11-1950 க்குப்பிறகு தோட்டங்களில் சிப்பந்திமார் வேலைகளுக்கு இலங்கையரல்லாதார்

களைப் புதிதாக அமர்த்துவதில்லையென்றும், அறுபது வய துக்கு மேற்பட்ட இலங்கையரல்லாதார் கட்டாயமாக ஓய்வு பெறச் செய்யவேண்டுமென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக் கிறது. இவை தோட்டச் சிப்பந்திமார்களைக் கடுமையாகப் பாதிக்கக்கூடும். சாதாரணமாகப் பல வருட காலத்துக்கு வேலைசெய்யக்கூடியவர்கள் ஒப்பந்தத்தின் காரணமாக 60 வயதானதும் ஓய்வுபெறச் செய்வதினால் பலவருட வேலையை இழக்கும் இவர்களுக்குத் தோட்டங்கள் கொடுக்கும் அற்ப பென்சன், போதிய ஈடாகமாட்டாது. சில சட்டரீதியான சிக்கல்கள் காரணமாகப் பிரஜா உரிமை பெறமுடியாமல் இருப்பவர்களும் கஷ்டத்துக்கு உட்படுத்தப்படுவார்கள். பிறவியில் இந்திய சமூகத்தைச் சேர்ந்த அரசாங்க ஊழியர் கள் முக்கியமாக தொழிலாளர் – அவர்கள் இலங்கையர் அல் லாதார் என்ற காரணத்திற்காகத் தினசரி வேலைநீக்கம் செய் யப்பட்டு வருகிறார்கள். பிரஜா உரிமைக்கு மனுக்கொடுக்கச் சட்டத்தின்படியே 1951ஆ ஆகஸ்ட் 5-ந் தேதிவரை தவணை கொடுக்கப்பட்டுள்ளதென்பதை அடியோடு அசட்டை செய் யப்படுகின்றது. சில சந்தர்ப்பங்களில் பிரஜா உரிமைக்கு மனுப்போட்டிருப்பவர்கள்கூட இலங்கையர்களாக இன்னும் பதிவுசெய்துகொள்ளவில்லையென்ற காரணங்களினால் வேலை நீக்கஞ் செய்யப்பட்டுள்ளார்கள். இவ்வித அநீதியான நட வடிக்கைகள் கொடிய கஷ்ட நஷ்டங்களை விளைவிப்பதா யிருக்குமாதலால் இனியாவது கட்டுப்பாடும், விவேகமும் நிலவுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அரசாங்க மந்திரி இலாகாவுக்கும், இந்திய வர்த்தக சங்கத்திற்குமிடையே ஏற் பட்டுள்ள உடன்படிக்கையின் பிரகாரம் கடைச்சிப்பந்திகள் நடத்தப்படும் பொறுப்பற்ற முறையைக்கண்டு இந்தியச் சமூகம் முழுவதுமே அதிர்ச்சியடைகின்றது. எவ்வித நஷ்ட ஈடுமின்றி 1-7-1948க்குப் பிறகு வேலைக்கு அமர்த்தப்பட்ட

இலங்கையரல்லாதார் அனைவரையும் வேலைக்கு செய்ய வேண்டுமென்ற நிபந்தனைக்கு இந்திய வர்த்தக சங்கம் ஒப்புக் கொண்டிருக்கிறது. எந்த நோக்கத்துடன் என்ன கொள்கை யோடு இவ்வித யோசனைக்கு இந்திய வர்த்தக சங்கம் இணங் கியது என்று தெரியவில்லை. விதிக்கப்பட்ட கால எல்லைக் கிடையில் ஒருவர் இலங்கை அரசாங்க சேவைக்காகவோ அல்லது யுத்த சேவைக்காகவோ வெளிநாடு சென்றிருந்தால் அவருடைய பிரஜா உரிமைக்கு மனுக்கொடுப்பதை அனு மதிக்கக்கூடியவாறு சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டுளது. இதிலும்கூட ஒருவர் கல்வி பயில்வதற்காக இங்கிலாந்து செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தால் அல்லது வைத்திய சிகிச்சைக்காக வெளிநாடு சென்றிருந்தால் விதிக் கப்பட்ட கால எல்லைக்குள் அவர் இலங்கையில் இல்லை என்ற காரணத்திற்காகப் பிரஜாஉரிமை பெறும் யோக்கியதாம்சம் அவருக்கு இல்லையென்று கூறப்படுகிறது. அதிகாரப் பதவி களிலிருப்பவர்கள் ஒரு நியாயவரம்பை அனுசரித்து நடக்க மறுக்கின்றார்கள். இலங்கை இந்தியர்களைக் கொடுமைப் படுத்துவதற்குக் குடியேற்றச் சட்டம் மற்றொரு ஆயுதமாக இருந்து வருகிறது. ஏற்கனவே இலங்கையிலிருக்கும் இந்தி யர்கள் பிரஜைகளானாலும்சரி அல்லாவிடினும் சரி தமது தொழிலைத் தொடர்ந்து நடத்துவதிலிருந்தோ, அல்லது வேலைகளில் தொடர்ந்து இருந்துவருவதிலிருந்தோ தடை செய்யப்பட மாட்டார்கள் என்றும், இதைப்பற்றி அச்சம் அவர்களுக்கு இருக்கத்தேவையில்லையென்றும், பிரதம மந் திரியைப்போன்ற பொறுப்புவாய்ந்த பதவிகளில் இருப்பவர் களால் அடிக்கடி மிகமிகத் தெளிவாக உறுதிமொழிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் குடியேற்ற வெளியேற் றச் சட்டம் ஆக்கிரமூட்டுவதாயும், கொடுமைப்படுத்துவ தாயுமிருப்பதோடு அதை அமுல் நடத்தும் முறையும் விஷ

மம் நிறைந்ததாகவிருக்கிறது. சொற்பகால ரஜாவிற்காக ஒருவர் இலங்கைக்கு வெளியே செல்லுவதாயிருந்தாலுங் கூட அவர்வசம் தற்காலிகவாச பர்மிட்டோ அல்லது நிரந்தர வாச பர்மிட்டோ இருந்தாலொழிய இலங்கைக்குத் திரும்பிவர அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால் தற்காலிகவாச பர்மிட் பெறுவதற்குள்ள நிபந்தனைகளோவெனில் மேலும் மேலும் அசாத்தியமானவைகளாகிக்கொண்டு வருகின்றன. மனுதார் 1944-ம் வருடத்திலிருந்து மனுக்கொடுக்கும் தேதிவரை இலங்கையில் வசித்தவரென்பதை தஸ்தாவேஜ் பூர்வமாக ருசுப்படுத்துமாறு கோரப்படுகின்றது.

தவிர, ஒவ்வொரு மனுதாரும் மிகுந்த சந்தேகப் பார்வையோடு நோக்கப்படுகிறார். எவ்விதமான அத்தாட்சிகளைக் காட்டிய பொழுதிலும் அவைகளில் அதிகாரிகள் திருப்தியடைவதாய் இல்லை. ஆடிட்டர்கள், டி. ஆர். ஓ. சர்டிபிக் கேட்டுகளோ, அல்லது கம்பெனிகளின் கணக்குப் புத்தகங்களோ இவைகளில் எதுவும் நம்பிக்கையான ருசக்களாக ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. சுருங்கச்சொல்லின் இது ஒரு பெரிய சோதனைகள் மலிந்த போராட்டம் போலவே இருக்கிறது. நிரந்தரவாசப் பர்மிட்டுகளுக்கோ யாரும் மனுச் செய்யத் துணிவதேயில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் அரசாங்கக் கட்சி ஆதரவாளர்களில் ஒருவரான டாக்டர் எம். ஸி. எம். கலீல் பார்லிமெண்டு சபையில் பின்வருமாறு கூறியது குறிப்பிடத்தக்கது:—

இதன் முழுவிபரங்களைப் பார்லிமெண்ட் நிகழ்ச்சிகள் அடங்கிய 15-3-51-ம் தேதிப் பிரசுரத்திற் காணலாம். "நான் சபையின் இந்தப் பக்கத்தில் (அதாவது சர்க்கார் கட்சியில்) உட்கார்ந்திருக்கின்ற பொழுதிலும், இவ்விஷயத்தைப்பற்றி அதிலும் காஸி மெம்பர் பேசியபிறகு, சில அபிப்பிராயங்களை வெளியிடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. கௌரவ

அங்கத்தினர் குறிப்பிட்டதைப்போல கஷ்டத்துக்குள்ளான ஒருவரல்ல, நூற்றுக்கணக்கான இலங்கை முஸ்லீம்களி னுடைய நிலைமை எனக்குத் தெரியும். இந்தப் பர்மிட்டுகளை வழங்கும் விஷயத்தில் முக்கியமாக யாத்திரைகள் போவது போன்ற அவசரமான சந்தர்ப்பங்களிலே ஒரு சுலபமான ஏற்பாட்டைப் பிரதமமந்திரி செய்தாகவேண்டும். அவ்விதம் செய்தால் இலங்கைச் சோனகர்களுக்கு ஏற்படும் பலவித மான துன்பங்களும், வசதியீனங்களும், செலவுகளும் தவிர்க் கப்படலாம். ஜனனப்பதிவு சர்டிப்பிக்கேட்டுகளைக் காட்டி யாகவேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்படாமல் பிரதம மந்திரி கவனித்துக்கொள்வாரென்று நம்புகிறேன். இவ்விஷயத்தில் முஸ்லீம்கள் மட்டுமல்ல, அநேக சிங்களவர்களும் கஷ்டத்திற் குள்ளாகியிருப்பதை நான் அறிவேன். தங்கள் ஜெனனம் பதிவு செய்யப்படவில்லையென்று கூறுபவர்கள் அநேகர் இருக்கிறார்கள். சிலசமயங்களில் ஒரு மனிதர் எப்படி அழைக்கப்படுகின்றாரோ அந்தப் பெயரில் அவருடைய ஜனனம் பதிவு செய்யப்படாமல் இருக்கின்றது. எனவே, ஜனனப்பதிவுச் சர்டிபிக்கேட் இல்லாமலிருப்பது முஸ்லீம் களுக்குமட்டும் அலாதியான பிரச்னையல்ல; இலங்கை மக்க ளில் ஏராளமான சனங்களுடைய பொதுவான பிரச்னை யாகும் இது. இலங்கை முஸ்லீம்களைப் பாதுகாக்கவும், இந்தக் கஷ்டங்களிலிருந்தெல்லாம் அவர்களை விடுவிக்கவும் ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமென்று நான் நம்புகிறேன். பெரும்பாலும் அவர்களுக்குப் பர்மிட்டுகள் வழங்க மறுக்கப்படுகின்றது. இதுதவிர, தற்காலீக வாசப் பர்மிட்டுகளைக் குறிப்பிட்ட ஒரு காலஎல்லைக்குள் புதுப்பித் துக்கொள்ளவேண்டியுமிருக்கின்றது. குடியேற்ற இலாகா வுக்குத் தன்னிடமே நம்பிக்கையில்லாத காரணத்தாலோ அல்லது இந்தியர்களை மீண்டும் கொடுமைக்குள்ளாக்க மற்

ருரு சந்தர்ப்பம் கிடைக்குமென்பதற்காகவோ வாசப் பர்மிட்டை ஒவ்வொரு முறையும் புதுப்பிக்கும்பொழுது பழைய அத்தாட்சிகளையெல்லாம் மீண்டும் காட்டி இலங்கையில் வசித்ததை ருசுப்படுத்த வேண்டியிருக்கின்றது. இந்த இலாக்காவின் வேலைமுறையை நியாயமானதாகச் செய்வதாயின் இவ்விலாகாவின் வேலைமுறையில் பாரதூரமான மாறுதல்களைச் செய்தாகவேண்டும். இந்தியாவிற்குச் செல்லும் ஒரு பிரயாணி பர்மிட் இல்லாமல் அற்ப தொகையான ரூபாய் 75 மட்டுமே எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுகின்ருர். அதிகப்படி தொகையை எடுத்துச்செல்ல வேண்டியிருந்தால் அவருக்கு அந்தத் தொகை அத்தியாவசியம் தேவை என்பதைக் கண்ட்ரோலருக்குத் திருப்தியேற்படக்கூடியமுறையில் ருசுப்படுத்தினல்மட்டுமே பர்மிட் கொடுக்கப்படுகின்றது. ஆனல் இப்பொழுது கட்டுப்பாடு சிறிதளவு தளர்த்தப்பட்டு வங்கிகள் மூலமாக மேற்கொண்டு ரூபாய் 150 கொண்டுபோக அனுமதிக்கப்படுகின்றது. இந்தப் புதிய ஏற்பாடு பாஸ்போர்ட் இல்லாமல் அடையாளச் சீட்டுடன் பிரயாணம் செய்யும் தோட்டத் தொழிலாளர்கள் விஷயத்திலும் அனுஷ்டிக்கப்படுமா என்பதில் சந்தேகம் இருந்து வருகின்றது. இந்த விஷயம் கூடிய சீக்கிரம் தெளிவுபடுத்தப்படுமென்று நம்பப்படுகின்றது. "குரூப்முறை" என்ற ஒரு ஏற்பாட்டின்படி தோட்டத் தொழிலாளர்கள் திருச்சிராப்பள்ளியிலுள்ள இலங்கை இமிகிரேஷன் கமிஷனர்மூலம் இந்தியாவிலிருக்கும் தங்களுடைய பந்துசனங்களுக்குச் சொற்ப தொகையனுப்ப அனுமதிக்கப்பட்டு வருகிருர்கள். தொழிலாளர்கள் பணம் அனுப்புவதற்கு வசதியான முறையென்று முன்னர் வருணிக்கப்பட்ட இந்தமுறை அவர்களைப் பிரஜைகளாகப் பதிவுசெய்யும் விஷயத்தில் எவ்விதம் அவர்களுக்குப் பாதகமாகப் பயன்படுத்தப் படுகின்றதென்பது இவ்

வறிக்கையின் பிற்பகுதியில் குறிப்பிடத்தக்கது. வர்த்தகத்தையும், இதர தொழில் துறைகளையும் இலங்கையர் மயமாக்கும் முயற்சி ஒரு அரசாங்க மந்திரியின் நியமனத்தில் முடிந்திருக்கிறது. ஏற்கனவே பல சந்தர்ப்பங்களில் வற்புறுத்திச் சொல்லியிருப்பதைப்போல இலங்கையர் மயமாக்கும் கொள்கையை நாம் எதிர்க்கவில்லை. நமது கொள்கை இவ்விஷயத்தில் என்னவென்றால், ஏற்கனவே வேலைகளில் இருப்பவர்கள் பாதிக்கப்படலாகாது. அதாவது அவர்களுடைய சீவிய மார்க்கம் பறிக்கப்படலாகாதென்பதுதான். வர்த்தகத்தை இலங்கையர் மயமாக்குவதற்கு ஊக்கமளிக்க இறக்குமதிக் கட்டுப்பாடு பயன்படுத்திக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தக்கொள்கை வர்த்தகத்தை இலங்கையர் மயமாக்குவதற்கு எவ்வளவுதூரம் உதவியுள்ளது என்பது தெரியவில்லை. இந்த முறையில் இலங்கையர் மயமாக்க முயற்சித்ததின் பயனாக ஒரு விசித்திரமான நிலைமையேற்பட்டது. இந்தியர்களின் பெயர்களைப் போன்ற பெயர்களை துரதிர்ஷ்டவசமாக வைத்துக்கொண்டிருந்தவர்களுக்கு இறக்குமதி லைசென்சுகள் மறுக்கப்பட்டன. இதனால் அநேகம் யாழ்ப்பாணத் தமிழர்களுக்கும், இலங்கை முஸ்லீம்களுக்கும் இறக்குமதி லைசென்சுகளைப் பெறுவதற்கான உரிமை மறுக்கப்படலாயிற்று. தற்காலிகக் ஹைகமிஷனராகக் கடமையாற்றிய ஸ்ரீ. என். சி. எஸ். ராகவாச்சாரிக்கு நமது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவர் நமக்கு மூலபலமாயிருந்து உதவியிருப்பதுடன் இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையில் மனக்கசப்பை உண்டுபண்ணுவதாயிருந்த பிரச்னைகளைத் தீர்ப்பதில் தம்மால் இயன்றளவு முயற்சிகள் செய்துள்ளார். அவருடைய சேவைகளுக்கெல்லாம் நமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது புதிய துறையில் சகல வெற்றிகளும் உண்டாகவேண்டுமென்று வாழ்த்துகிறோம்.

இலங்கையில் இந்திய ஹைகமிஷனராக நியமிக்கப்பட்டுள்ள ஸ்ரீ கே. எஸ். மேனன் அவர்களுக்கும் நமது பாராட்டு உரித்தாகுக. தொழிலாளர் நலனுக்காக அவர் ஆற்றியுள்ள சேவைகள் யாவரும் அறிந்தவைகளே. அவருடைய நியமனம் மிகவும் பொருத்தமானதாகும்.

* * *

1948 ம் வருடத்திய 18 ம் இலக்க இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டத்தின்படி வம்சாவழிப் பிரஜையாகக் கூடியவர்களின் யோக்கியதாம்சங்களை அறிந்திருப்பீர்கள். இனிப் பதிவுப் பிரஜைகளாகக் கூடியவர்களின் யோக்கியதாம்சங்களைக் கவனிப்போம். ஒரு நபரின் தாய் இலங்கையின் வம்சாவழிப் பிரஜையாயிருந்து, அவருக்குக் கல்யாணமும் ஆகியிருந்தால் அவர் மனுக்கொடுப்பதற்கு 7 வருட காலத்திற்கு முன்பிலிருந்து இலங்கையில் தொடர்ந்து வசித்து வந்திருப்பின் இலங்கைப் பிரஜையாகத் தம்மைப் பதிந்துகொள்ளலாம். இப்படிப்பட்டவர் கல்யாணமாகாதவராயிருப்பின் மனுக்கொடுப்பதற்குப் 10 வருடங்களுக்கு முன்பிலிருந்து இலங்கையில் தொடர்ந்து வசித்து வந்திருப்பின் இலங்கைப் பிரஜையாகப் பதிவு செய்துகொள்ளலாம். இவ்விரண்டையும் தவிர ஒருவர் வம்சாவழி மூலமாகவோ அல்லது பதிவின் மூலமாகவோ இலங்கைப் பிரஜையாகிய ஒருவரை மணந்திருந்து மனுக்கொடுப்பதற்கு ஒருவருடகாலத்திற்குமுன் இலங்கையில் தொடர்ந்து வசித்து வந்திருந்தால் அப்படிப்பட்டவரும் இலங்கைப் பிரஜையாகப் பதிவு செய்துகொள்ளலாம். ஆக இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டத்தின் பிரகாரம் மூன்றுவித நிலைமையிலுள்ளவர்கள் பதிவின் மூலம் இலங்கைப் பிரஜைகளாக முடியும். மேலே குறிப்பிட்ட 1948 ம் வருடத்திய 18 ம் இலக்க இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டத்தைத் தவிர இலங்கையில் வசிக்கும் இந்தியர் பாகிஸ்தானிகள் ஆகியோர் பதி

வின்மூலம் இலங்கைப் பிரஜாவுரிமையைப் பெற வேருெரு சட்டமும் இருக்கிறது. அதுதான் இந்தியர் பாகிஸ்தானிகள் பிரஜாவுரிமைச் சட்டம். இந்தச் சட்டம் இந்தியர்களிலும் பாகிஸ்தானியர்களிலும் தம்மை இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்துகொள்ள விரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட நிபந்தனைகளைப் பூர்த்திசெய்விப்பவர்களாயிருக்கவேண்டும். இந்தியாவிலிருந்தோ அல்லது பாகிஸ்தானிலிருந்தோ இலங்கைக்கு வந்து இங்கு நிரந்தரமாகக் குடியேறியவர்களாக வேண்டும் அல்லது இப்படிக் குடியேறியவர்களுக்கு இலங்கையில் பிறந்தவர்களாயிருக்கவேண்டும்.

கல்யாணமானவராயிருந்தால் 1 - 1 - 1939 ம் வருடத்திலிருந்து 7 வருடகாலமும் பிரமச்சாரியாயிருப்பின் 1 - 1 - 1936 ம் வருடத்திலிருந்து 10 வருடகாலமும் இலங்கையில் தொடர்ந்து வசித்தவராயிருக்கவேண்டும். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஒருவருடத்திற்குக் குறைவாக இலங்கைக்கு வெளியிலிருந்தால் இலங்கையில் தொடர்ந்து வசித்தது பாதிக்கப்பட்டதாகக் கருதப்படமாட்டாது கல்யாணமானவராயிருப்பின் அவருடைய மனைவியும் மைனர் குழந்தைகளும் சாதாரணமாக மனுதாருடன் இலங்கையிலே வசிப்பவர்களாயிருக்கவேண்டும்.

மனுதாருக்கு ஒரு உத்தியோகமோ அல்லது நிலைமைக்குப் போதிய வருமானமோ இருக்கவேண்டும். இலங்கைச் சட்டங்களுக்கு உட்பட்டு இலங்கையில் வசிக்கும்படியான தடைகளும் தடங்கல்களும் மனுதாருக்கு இல்லாதிருக்க வேண்டும்.

வம்சாவழிப் பிரஜாவுரிமைக்குரிய யோக்கியதாம்சங்கள் ஒருவருக்குத் திருப்திகரமாக இருக்குமானுல் அதை ஸ்தாபித்துக்கொள்ள அவர் எவ்வித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. கேட்கும்போது இந்த உரிமை

யைத் தஸ்தாவேஜு பூர்வமாக அவரால் நிரூபணம் செய்ய முடியுமானால் அவர் தம்மை வம்சாவழிப் பிரஜையென்று சொல்லிக்கொள்ளலாம். இந்த உரிமையைப் பெறுவதில் சந்தேகங்கள் ஏதாவது இருக்குமானால் மட்டுமே அப்படிப் பட்டவர்கள் இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டத்தின் 5-வது ஷரத்தின்படி தாம் வம்சாவழிப் பிரஜையென்று சர்டிபிக் கேட் கொடுக்கவேண்டுமெனக்கோரி வெளிநாட்டு மந்திரிக்கு மனுக்கொடுக்கலாம். இப்படி மனுக்கொடுப்பதற்குத் தேவை யான விண்ணப்பப் பத்திரங்களை 'வெளிநாட்டிலாகா மந்திரி சபை, செனட்சபைக் கட்டிடம், கொழும்பு' என்ற விலாசத் துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். இலங்கைப் பிரஜா உரிமைச் சட்டத்தின்கீழ் பதிவுப் பிரஜையாகக் கீழ்க்கண்ட வர்கள் மனுக்கொடுக்கலாம். வம்சாவழிப் பிரஜையான ஒரு இலங்கைப் பெண்ணைத் தாயாராயுடையவர்கள், இலங்கைய ரான ஒருவரை மணம்செய்துகொண்டிருப்பவர்கள்-இவ்விரு தரப்பினரும் இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்துகொள்ள வெளிநாட்டிலாகா மந்திரி சபையிடம் மனுக்கொடுக்கவேண் டும். இத்தகையினர் இந்தியர் பாகிஸ்தானியர் பிரஜாவுரிமைச் சட்டத்தின்படியும் இலங்கைப் பிரஜைகளாகப் பதிவுசெய்து கொள்ளலாமென்றாலும், அப்படிச் செய்யாமல் இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டத்தின்கீழ் இலங்கைப் பிரஜைகளாகப் பதிவுசெய்துகொள்ள முயற்சிப்பதுதான் சிறந்தது. இப்படிப் பிரஜாவுரிமை பெறக்கூடியவர்கள் சுமார் எட்டுப் பிரிவினராக இருப்பதால் ஒவ்வொரு பிரிவிற்கும் பிரத்தியேகமான மனுப்பத்திரங்கள் அச்சிடப்பட்டிருக்கின்றன. பிரஸ்தாப பிரிவுகள் பின்வருமாறு:—

கல்யாணமாகாத பிரமச்சாரியாக – ஆனால் மைனர்ப் பருவத்திற்கு மேற்பட்டவர் 'அ' என்ற பத்திரத்தில் விண் ணப்பிக்கவேண்டும். ஒருபெண் சட்டபூர்வமாகக் கல்யாணம்

செய்துகொள்ளாமல் ஒரு ஆடவருடன் சேர்ந்து வாழ்ந்து வந்தால் அப்படிப்பட்ட பெண்ணும் இந்த விண்ணப்பபத்தி லேயே மனுக்கொடுக்கவேண்டும். இப்பெண்ணுக்கு மைனர் குழந்தைகளிருந்தால், அந்தக் குழந்தையையும் தன்னுடன் பதிவுசெய்து கொள்ளலாம்.

ஒருவர் பிறரை அண்டிப் பிழைக்காமல் சுயமாகச் சம் பாதித்து ஜீவனஞ்செய்யும் மைனராக இருந்தால் அவர் 'பி' பத்திரத்தில் மனுக்கொடுக்கவேண்டும்.

விதவை, மனைவியை இழந்தவர் அல்லது விவாகரத்துச் செய்துகொண்டவர்கள் முதலியோர் 'ஸி' பத்திரத்தில் மனுக் கொடுக்கவேண்டும்.

கல்யாணமான ஒருவர் தமது கல்யாணம் விவாகரத்து முறையினால் ரத்துச்செய்யப்படாமல் இருந்தால் அவர் 'டி' பத்திரத்தில் மனுக்கொடுக்கவேண்டும். ஒருபெண் கல்யாண மாகி அந்தக் கல்யாணம் ரத்துச் செய்யப்படாமலே சட்ட பூர்வமான பிரிவினை ஒப்பந்தத்தின்படி புருஷனைப் பிரிந்து வாழ்ந்துவரின் அவர் 'ஈ' பத்திரத்தில் மனுக்கொடுக்க வேண் டும். ஒருவிதவை தனது கணவன் உயிருடனிருக்கும்பட்சத் தில் இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்துகொள்ளும் யோக் கியதாம்சங்கள் உடையவராய் இருந்திருப்பின், அத்தகைய விதவை 'எ' பத்திரத்தில் மனுக்கொடுக்கவேண்டும். இலங் கைப் பிரஜையாகப் பதிவுசெய்துகொள்ளும் யோக்கியதாம் சங்கள் உள்ள ஒரு இந்திய அல்லது பாகிஸ்தானி ஆடவர் காலஞ்சென்றிருந்தால் அவரது மைனர்க் குழந்தைகள் 'பி' பத்திரத்தில் மனுக்கொடுக்க வேண்டும். இலங்கைப் பிரஜை யாகத் தனது குழந்தைகளைப் பதிவுசெய்துகொள்ளக்கூடிய யோக்கியதாம்சங்களுடைய ஒரு இந்திய அல்லது பாகிஸ்தா னியப் பெண் காலஞ்சென்றிருந்தால் அப்படிப்பட்டவரின்

குழந்தைகள் 'ஸி' பத்திரத்தில் மனுக்கொடுக்கவேண்டும். இந்த எட்டு வகைப்பட்ட பத்திரங்களிலும் அதிகமாக உபயோகிக்கப்படக்கூடியது 'டி' பத்திரம்தான். அதற்கு அடுத்தபடி உபயோகமாகக்கூடியவை ஏ, ஸி பத்திரங்களாகும். மற்றவகைப் பத்திரங்களில் மனுக்கொடுப்பது சொற்பமாகவேயிருக்கும். ஒரு விதவைக்கு இலங்கைப் பிரஜையாவதற்குரிய சகல வாசகால யோக்கியதாம்சங்களும் இருக்குமாயின் அவர் 'ஸி' பத்திரத்தில் மனுக்கொடுக்கவேண்டுமே தவிர 'ஏ' பத்திரத்தில் அல்லவென்பது கவனிக்கத்தகுந்தது. விண்ணப்பங்களைத் துரிதமாக முடிவு செய்வதற்காக இந்தியத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்திக்கொண்டிருக்கும் தோட்டங்கள் எந்த வரிசைக் கிரமத்தில் கவனிக்கப்படவேண்டுமென்பதற்கு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொருமாசத்துக்கும் ஒதுக்கிய தோட்டங்களிலுள்ள தொழிலாளர் தேவையான விண்ணப்பப் பத்திரங்களைத் தருவித்துக் கொடுக்குமாறு தோட்டசூப்பரண்டன்டைக் கேட்டுக்கொள்ளவேண்டும். பிறகு இந்த விண்ணப்பப் பத்திரங்களை மனுதார்கள் தாங்களாகவோ அல்லது நண்பர்களைக்கொண்டோ பூர்த்திசெய்ய வேண்டும். பிறகு விண்ணப்பப் பத்திரத்தில் தாங்கள் கொடுத்துள்ள தகவல்களும், தோட்டப் புத்தகங்களில் பதிந்து வைக்கப்பட்டுள்ள தகவல்களும் ஒரேமாதிரியாக இருக்கின்றனவா என்பதைத் தோட்ட உத்தியோகஸ்தர்களைக்கொண்டு ஒருமுறை சரிபார்த்துக்கொள்ள வேண்டும். இதைத்தவிர வேறு உதவிகள் ஏதாவது தேவையாயிருந்தால் தோட்டக் கமிட்டியைக்கொண்டோ அல்லது தோட்ட சூப்பிரண்டைக்கொண்டோ 'இந்திய ஹைகமிஷனர், தபால் பெட்டி நம்பர் 882, கொழும்பு' என்ற விலாசத்துக்கு எழுதினால் ஹைகமிஷனர் தேவையான உதவிகளைச் செய்வார். இவ்விதம் மனுவைப் பூர்த்திசெய்தபின் அதை இந்தியர்

பாகிஸ்தானியர் பிரஜைபதிவுக் கமிஷனர், தபால்பெட்டி நம்பர் 587, கொழும்பு என்ற விலாசத்துக்கு அனுப்பிவைக்க வேண்டும். இந்தமனுக் கிடைத்தவுடன் கமிஷனர் ஒரு உத்தியோகஸ்தரைத் தோட்டத்துக்கு அனுப்பி விண்ணப்பப்பத்திரத்தில் கொடுத்துள்ள தகவல்கள் எல்லாம் சரியாய் இருக்கின்றனவா என்பதைப்பற்றி விசாரணை நடத்துவார். பூர்வாங்க யோக்கியதாம்சங்களை ருசுப்படுத்தி விட்டதாக விசாரணை அதிகாரி தெரிவித்தால் அப்படிப்பட்ட மனுதார்களின் பெயர்கள் கெஜட்டில் பிரசுரிக்கப்பட்டு அவர்களை பிரஜைகளாகப் பதிவு செய்வதை ஆட்சேபிக்க விரும்புவோர் ஒருமாத காலத்துக்குள் தங்களது ஆட்சேபணைகளை எழுத்துமூலம் தாக்கல் செய்யலாமென்று கமிஷனர் கோருவார். ஒரு மாத முடிவில் ஆட்சேபணைகள் எதுவும் இல்லாமலிருப்பின் மனுதார் இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்துகொள்ளப்படுவார். அதிகத் தொழிலாளர் உள்ள தோட்டங்களாக இருந்தால் அந்தத்தோட்டங்களில் தொழிலாளருக்கு விசுவாசப் பிரமாணம் செய்விக்க ஒரு உத்தியோகஸ்தர் நேரில் வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழர், முஸ்லீம்கள் பெயர்கள் பலவற்றை வாக்காளர் ஜாபிதாக்களிலிருந்து நீக்கப்பட்டுள்ளதைக் குறித்து கொழும்பு மத்தியதொகுதி இரண்டாவது மெம்பர் டாக்டர் கலீல் எடுத்துக் காட்டியதற்கு இவ் விஷயத்தை உள்நாட்டு மந்திரியின் கவனத்துக்குக் கொண்டு வருவதாக நிதிமந்திரி சமாதானம் கூறினர். ஆனல் ஏற்கனவே இந்தத் தவறு செய்யப்பட்டு விட்டது. இதனல் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீண் மனவேதனையும் சங்கடமும் ஏற்பட்டுள்ளது. இதற்காக மந்திரி தமது வருத்தத்தைக் கூடத் தெரிவிக்காமலிருந்தது ஆச்சரியமே.

புதிய வாக்காளர் இடாப்புகளும் ஆங்கிலத்தில்தான் அச்சடித்துப் பிரசுரிக்கப்படுமாம். சிங்களத்திலும், தமிழிலும்

பிரசுரித்தால்தான் பெரும்பாலோருக்குப் பயன்படும். ஒரு சுதந்தர நாட்டின் தேசிய கௌரவத்துக்கும் உகந்ததாக இருக்கும். ஆனால் போதிய அச்சு வசதிகள் இல்லாமையால் இவ்வாறு செய்ய முடியவில்லை என்று நிதிமந்திரி கூறியுள்ளார். வெளியில் பல அச்சுச்சாலைகளின் உதவியை ஏன் நாடியிருக்கக்கூடாது? எப்படியும் வாக்காளர் இடாப்புகளைத் தயாரிப்பது சம்பந்தமாக அரசாங்கம் கைக்கொண்ட முறை பலருக்கு அநீதி செய்துவிட்டதுடன் தேசிய மொழிகளையும் அவமதிப்பதாகிறது. இதுகுறித்துச் சிறுபான்மைச் சமூகத்திலேயே கருத்து வேற்றுமை இருக்கலாம். ஆனால் இப்போதுள்ள அரசியல் அமைப்பை அரசியல் நிர்ணயசபை தயாரிக்கவில்லை. சோல்பரித்திட்டம் பழைய அரசாங்கசபை நிறைவேற்றிய ஒரு திட்டத்தை அடிப்படையாகக் கொண்டது. இது அமுலுக்கு வந்த மூன்று வருஷங்களுக்குள் இதில் பல திருத்தங்கள் செய்யவேண்டிய அவசியத்தை அரசாங்கக் கட்சியே உணர்ந்துள்ளது. எந்த அரசியல் திட்டமும் முடிவானதல்ல. நாட்டின் முன்னேற்றத்துக்காகவும் மக்களின் சுகவாழ்வுக்காகவும் அனுபவத்துக்குத் தகுந்த முறையில் அவ்வப்போது அரசியலைத் தகுந்தபடி மாற்றி அமைப்பது அவசியமே. சமீபத்தில் செனெட் சபையில் இவ் விஷயமாக டாக்டர் நாகநாதன் கொண்டுவந்த பிரேரணைக்கு ஆதரவு கிடைக்கவில்லை.

அடுத்த தேர்தலில், உண்மையாக நாட்டுக்குழைக்கக் கூடிய பிரதிநிதிகளையே தெரிவுசெய்ய வேண்டும். வீணில் டாம்பீகமாகப் பேசும் மேடைப்பிரசங்கிகளை நம்பித் தமிழ் மக்கள் ஒருபோதும் ஏமாந்துவிடக்கூடாது. சிலர் சிங்களவரை மனம்போனபடி திட்டி மக்களிடம் ஆவேசத்தைக் கிளப்பி வாக்குப் பெற்றபின் சிங்களவர்களிடமே அடிமையாகிவிட்டார்கள். இவற்றையெல்லாம் கவனிக்குமிடத்துக்.

கட்சி எது என்பதை நோக்காது தேர்தலுக்கு நிற்பவர் பொதுஜனத்தொண்டு செய்பவரா? அல்லது தனது வயிற்றை நிறைப்பவரா? என்று பார்த்து, சாராயத்துக்கும் 5 ரூபாய்க்கும் அருமை வோட்டுரிமையைக் கொடுக்காமல் உண்மையாகச் சேவை செய்யும் உத்தமருக்கு ஒவ்வொருவரும் வோட் கொடுக்கவேண்டும். அடக்கி ஆளும் மனப்பான்மையின்றி உரிமைக்காக வாதாடும் எண்ணம் யாவர் மனதிலும் உதிக்கவேண்டியதவசியம்.

தமிழர்கள் பல மதத்தினர். சைவர்கள், வைஷ்ணவர்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் என்ற மதப்பிரிவுகள் உண்டு. அரசியற் கொள்கையிலும் பல வேற்றுமைகள் உண்டு. எனினும், இவர்களெல்லாம் தமிழன்னையின் புதல்வர்கள். தமிழ்ப் பேசும் சகோதரர்கள்.

பூர்வீககாலந் தொடங்கி இந்நாட்டில் தமிழ் இனமும் சிங்கள இனமும் வாழ்ந்துவருகின்றன. ஆகவே இலங்கையின் உரிமைக்காரர்கள் இரண்டு இனத்தவர்களுமாவர். பல தருணங்களில் வெளியே இருந்துவந்து இலங்கையில் குடியேறிய வெவ்வேறு குழுவினர் சிங்கள இனத்தோடு சேர்ந்து சிங்களவராகினர். அம்பலாங்கொடை, பலப்பிட்டியா பகுதியில் வசிக்கும் ஹலாகம வகுப்பினர் ஒல்லாந்தர் காலத்தில் தென்னிந்தியாவில் இருந்துவந்து குடியேறிய மக்கள். இவர்கள் நிரந்தர சிங்கள மக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்தனர். இதில் பிழையொன்றுமில்லை. ஓர் தேசத்தின் நிரந்தர வகுப்பினரோடு பின் வந்து குடியேறுபவர்கள் சேர்ந்து நிரந்தர மக்களின் தொகையைப் பெருக்குவது சகஜம். அதுபோல இலங்கையில் வந்து குடியேறும் வேறு குழுவினர்கள் இங்கே நிரந்தரமாய் வாழும் தமிழ் முஸ்லீம் மக்களோடு சேர்ந்து அவர்கள் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்வதும் நியாயமானதே. அதற்குத் தடையாக இருப்

பது இங்கு வாழும் தமிழ்பேசும் மக்களின் உரிமைக்குப் பாதகமானது. இலங்கைக்கு வந்து குடியேறும் குழுவினர் இங்கிருக்கும் தமிழ்பேசும் மக்களோடு ஒன்றுவதற்கு அரசாங்கம் எதிராய் இருக்கும் பட்சத்தில் இலங்கைவாழ் நிரந்தரத் தமிழ்பேசும் இனத்திற்கு இலங்கை உரிமையற்றது என்பது கருத்து. இவ்விஷயத்தில் நடப்பது என்னவென்று ஆராய்வோம்.

கடந்த ஒரு நூற்றாண்டில் இலங்கையில் சுமார் 7, 8 லட்சம் தமிழ்மக்கள்வந்து குடியேறினார்கள். சர்வதேச அரசியல் நீதியின்படி இந்த 7, 8 லட்சம் தமிழ்மக்கள் இங்கு நிரந்தரமாய் இருக்கும் தமிழ்மக்களோடு ஒன்றுகூடி வாழ்வதற்கு உரிமையுண்டு. சிங்கள அரசாங்கம் இதற்கு முழு விரோதமான சட்டங்களையும் நடைமுறைகளையும் நடாத்தி வருகின்றது. சிங்கள ஆட்சி உற்பத்தியான 1947-ம் ஆண்டின்பின் இந்த 7, 8 லட்ச மலைநாட்டுத் தமிழ் மக்களின் பிரஜா உரிமை பறிபோகச் சட்டங்கள் ஏற்பட்டன. குடியேறிய இந்தியத் தமிழ் மக்களுக்கல்ல; நிரந்தரமாய் வாழும் இலங்கைத் தமிழ் மக்களாகிய எங்களுக்கே இந்த அடி. இன்று அவர்களுக்கு; நாளை எங்களுக்கு.

"வாக்குரிமையைப் பறிக்கச் சட்டம்"

இது நிற்க, இந்த 7, 8, லட்சம் தமிழ் மக்களின் பிரஜாவுரிமை பறிபோனதுடன் நிற்கவில்லை. இன்று அவர்களின் வாக்குரிமையும் பறிபோய்விட்டது. மத்திய, ஊவா மாகாணங்களில் தற்பொழுது தயாரித்த வாக்காளர் டாப்புகளில் மலைநாட்டுத் தமிழ், முஸ்லீம் மக்களின் பெயர்கள் எல்லாம் அகற்றப்பட்டுள்ளன. வரப்போகும் தேர்தலில் தற்போது மத்திய, ஊவா மாகாணங்களிலிருந்து ஜனப்பிரதிநிதிகள் சபைக்கு வந்திருக்கும் தமிழ்-முஸ்லீம் பிரதிநிதிகள் எட்டுப்

பேரில் ஒருவரும் தெரிந்தெடுக்கப்படமாட்டார்கள். இதுவா ஜனநாயகம்? இதுவா அரசாங்க நீதி? கல்லோயாவில் அரசாங்கம் தன் பணத்தையும்-பலத்தையும்-ஆதிக்கத்தையும் உபயோகித்து சிங்கள மக்களைக் குடியேற்றுகின்றது. தற்சமயம் முஸ்லீம் தொகுதியாயிருக்கும் கல்முனைத் தொகுதி சீக்கிரத்தில் முஸ்லீம் தொகுதியில்லாது சிங்களத் தொகுதியாக மாறிப்போகுமோ என்று முஸ்லீம் பிரதிநிதிகளே பயப்படுகிறார்கள். மத்தியபகுதித் தமிழர்களைத் தாக்கும்போது அரசாங்கத்துக்கு உதவியாய் நின்ற கிழக்கு மாகாணத்துப் பிரதிநிதிகள் அதே அரசாங்கத்துக்கு தம் மக்கள் இரையாவதைப் பார்த்து நிற்கும் நாள் இவ்வளவு சீக்கிரத்தில் வந்துவிட்டது.

இப்புத்தகம் அச்சாகிக்கொண்டிருந்தபோது இலங்கை-இந்தியர் பிரஜா உரிமைபற்றி ஒரு புதிய, முக்கியத்துவம் வாய்ந்த நீதிஸ்தலத் தீர்ப்பு வெளியாகியிருக்கிறது. கேசாலைப் பகுதியைச் சேர்ந்த ஸ்ரீ கே. ஜி. எஸ். நாயர் என்பவர் தம்மை இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்து கொள்ளாததால், அவருடைய பெயரை வோட்டர் ஜாபிதாவிலிருந்து நீக்கியிருந்தார்கள். இதை ஆட்சேபித்து ஸ்ரீ நாயர் கேகாலை ஜில்லாக் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தார். பல்லாயிரக்கணக்கான இலங்கை இந்தியர்களின் பெயர்கள் இதே காரணத்தினால் வோட்டர் ஜாபிதாவிலிருந்து நீக்கப்பட்டிருப்பதால், இந்த வழக்கின் தீர்ப்பை அறிவதில் எல்லோரும் மிகுந்த ஆவல் காட்டினார்கள். சென்ற 2-7-51ல் நீதிபதி கனம் என். சிவஞானசுந்தரம் அவர்கள் கீழ்க்கண்டவாறு தீர்ப்புக்கூறினார்: "இலங்கைப் பிரஜாஉரிமைச் சட்டமும், இலங்கைப் பார்லிமென்டரிச் சட்டத் திருத்தச் சட்டமும் சட்டவிரோதமானவை. ஸ்ரீ நாயரின் பெயரை மறுபடியும் வோட்டர் ஜாபிதாவில் சேர்த்துக்கொள்ளவேண்டும். அதோடு, அவர்

அப்பீல் மனுவில் ஒட்டிய ஐந்து ரூபா முத்திரைக் கட்டணம் அவருக்குத் திருப்பிக் கொடுக்கவேண்டும்.''

இந்தத் தீர்ப்பிலிருந்து இலங்கை–இந்தியரின் கோரிக்கை நியாயமானதென்பதைச் சட்டம் ருசுப்படுத்தியிருக்கிறது. ஸ்ரீ நாயரின் பெயரை மட்டுமன்றி இதுவரை நீக்கப்பட்ட எல்லா இலங்கை - இந்தியர்களின் பெயர்களையும் வோட்டர் ஜாபிதாவில் சேர்த்து கண்ணியமான முறையில் அரசாங்கம் நடந்து கொள்ளுமென யாவரும் எதிர்பார்க்கின்றனர்.

ஜனாப் ஏ. அஸீஸ் எம். பி. அவர்கள் சொல்வதுபோல, மேற்படி தீர்ப்பில் அரசாங்கம் அப்பீல் செய்துகொள்வதானால் செய்துகொள்ளலாம். ஆனால் அதுவரை வோட்டர் ஜாபிதாவில் இலங்கை இந்தியர் பெயர்கள் இருக்க வேண்டும். அப்பீலின் முடிவு தெரியும்வரை அடுத்த பொதுத்தேர்தலையும் நிறுத்திவைக்கவேண்டும். அப்படியில்லாமல் பொதுத்தேர்தல் நடத்தப்படுமானால், அவை செல்லுபடியாகுமா என்பது பெரிய பிரச்னையாக இருக்கும்!

"தமிழ் மொழிக்கு ஆபத்து"

நமது மொழியின் நிலைமை ஆபத்தானது. பேச்சளவில் தமிழும் – சிங்களமும் அரசாங்க பாஷைகள் என்று சொல்லிக் கொள்ளுவார்கள். நடைமுறையிலோ வரவரச் சிங்களமே அரசாங்க பாஷையாகின்றது. ஒருநாட்டில் வசிக்கும் மக்கள் எல்லோரும் ஓர் இனத்தைச் சேர்ந்தவர்களாயிருந்து அந்நாட்டை ஆளுவதற்கு வகுப்பது ஒற்றை ஆட்சி அரசாங்கம். எத்தனையோ தேசங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட பல இனங்கள் வசிக்கின்றனர். இப்படிப்பட்ட நாடுகட்கோ ஒற்றை ஆட்சி அரசாங்கம் ஏற்றதன்று. இவற்றிற்கு அரசியல் அனுபவத்தில் கண்ட சிறந்தமுறை; இணைப்பு அல்லது சமஷ்டி அரசாங்கமே.

நான் கடைசியாகத் தெரிவிக்கக்கூடியது இது:

பார்லிமென்ட் தமிழ் அங்கத்தவர்கள் ஒருங்கு கூடி இலங்கை இந்தியரின் இன்னல்களைக் களைவதிலும், தேசியக் கொடியை மாற்றி அமைப்பதிலும் தமது முழுச் சக்தியையும் பிரயோகித்துப் போராடவேண்டும்.

இப்போது இருக்கும் கொடி சிறுபான்மையோரை மிகவும் சிறியவர்களாகவும், பெரும்பான்மையோரை மிகப் பெரியவர்களாகவும் காட்டுகின்றது. இது தமிழ்மக்களுக்கு மானக்கேடான விஷயமென்பதை ஒவ்வொருவரும் ஊன்றி உணர வேண்டும். நான் சபைத்தலைவருடனும், பிரதம மந்திரியுடனும் கொடிப்பிரச்னை சம்பந்தமாகச் சம்பாஷித்தபோது எனது கருத்துக்களுக்கு மிக அனுதாபங் காட்டினார்கள். சேர் ஏ. மகாதேவா அவர்களும் சில மாதங்களுக்கு முன் இது விஷயமாக என்னுடன் கதைத்தபோது இப்பிரச்னைகளில் இலங்கை அரசாங்கம் நீதி செலுத்தவில்லையென்று சொன்னார்.

இந்தக் குறைபாடுகளுக்கெல்லாம் இன்றைய ஆட்சியாளர்களைக் குறைகூறவேண்டியதில்லை. சுயநலத்தினாலோ, எடுப்பார் கைப்பிள்ளையாக மாறிவிட்டதனாலோ தன்னினத்தைத் தானே கெடுக்கும் கோடரிக்காம்புகளாகிவிட்ட நமது பிரதிநிதிகளையே குற்றவாளிகளாக மக்கள் மன்றத்தில் நிறுத்த வேண்டும்.

★

'அவரி'

நெறுக்கும்

மெஷின்

நியாய விலையில்

கிடைக்கும்.

★



பலவித இரும்புச் சாமான்களும், சீமேந்தும்
மற்றும் எல்லா வகையான ஹாட்வேயர்
சாமான்களும் குறைந்த விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.

பச்சா அன்ட் கம்பனி

ஹாட்வேயர் வியாபாரிகள்

320, பழைய சோனகத் தெரு, — கொழும்பு.

டெலிபோன்: **5036**

மதிப்பு வாய்ந்த பிரிலியன்டுகளும்,
உயர்தரமான அழகிய நகைகளும்

★

நம்பிக்கையாக, நிதானவிலையில்
எம்மிடம் பெறலாம்.

★

ஏ.கே.முகம்மது அப்துல்காதர்

172, இரண்டாம் குறுக்குத்தெரு, கொழும்பு.

இந்தியா விலாசம்:

43, மூர்க்க நல்லமுத்துத் தெரு, மதுரை.

---

80 × 80 முருகன் மார்க் சாரம்
60 × 40 கலசம் மார்க் சாரம்

மற்றும் மல்புடவைகள், சில்லறையாகவும்,
மொத்தமாகவும் சகாய விலையில் கிடைக்கும்.

ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள்

முருகன் பழையகாட் கம்பனி,

241, *மெயின் ஸ்றீற், கொழும்பு.*

கட்டிடங்கள் — எஸ்டேட்டுகள்

இவைகளுக்குத் தேவையான சாமான்கள்
ஓடர் செய்யும்பொழுது ஞாபகத்தில்
வைத்துக்கொள்ளவேண்டிய பெயர்

'செட்டிநாடு'

எல்லாம் சகாயமான விலையில்
கிடைக்கும்.

★

செட்டிநாட் கார்ப்பரேசன் லிட்.,

116/118, கெய்சர் வீதி, :: கொழும்பு.

டெலிபோன்: 4276. 4277

தந்தி: "ஸாஹன்ஸ்"

K. N. MEERA

209, 4th Cross Street, :: COLOMBO.

★

ஏராளமான சில்லறைச் சாமான்கள், சாப்புச் சாமான்கள், பிஸ்கோத், லொசெஞ்சர்கள் முதலியவற்றை மிக சகாய விலைகளில் வழங்குகிறார்கள். அதனால், கொள்முதல் செய்யும்பொழுது எங்களை விசாரியுங்கள்.

★

கே. என். மீரா

மீரா டெல்ஹி ஸ்டோர்ஸ்

209, நாலாம் குறுக்குத்தெரு,

— கொழும்பு —

SRI PARWATHI PRESS, JAFFNA.

Dr. U. V. S. IYER LIBRARY MADRAS-90